தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1979 ஏப்ரல் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நீர் மின்விசை உற்பத்தி

*வினா எண். 700—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) புதியதாக 580 மெகாவாட் நீர் மின்விசையை உற்பத்தி செய்வதற்குரிய ஆய்வு திட்ட அறிக்கையை மத்திய மின்சார ஆணைக்குழுவிடம் அங்கீகாரத்திற்காக தமிழக அரசு தாக்கல் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனின் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு ச. இராமசசந்திரன் :

(அ)&(ஆ) : சோழாத்திப்புழா, மேல்தாமிரபரணி, மணிமுத்தாறு, சண்முகாநதி, மேல் அமராவதி, அக்காமலை, சின்னாறு-சிட்டாறு—குந்தா ஐந்தாவது நிலை விரிவு பரளியாறு ஆகிய ஒன்பது திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகளைத் தமிழ்நாடு மின்வாரியம் ஒப்புதலுக்காக மத்திய மின் ஆணைக் கழகத்திடம் தாக்கல் செய்துள்ளது. இத்திட்டங்களின் மொத்த நிறுவனத்திறன் 410 மெகாவாட் ஆகும்.

திரு ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட இந்தத் திட்டங்கள் பற்றி மத்திய அரசின் அனுமதி இந்த திட்டங்களை பூராவிற்கும் கொடுத்திருக்கிறதா அல்லது ஒருசிலவற்றிற்கு மட்டும் கொடுத்திருக்கிறதா? அப்படியானால் அதன்பேரில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சோழரதப்புழாத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கேரள அரசிடன் சில பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அதன் அடிப்படையில் அவர்களுடைய கருத்தும் எதிர்ப்பார்க்கப் படுகிறது. மேல் தாமிரபரணி நீர்மின் திட்டம், மத்திய மின் ஆணைக் கழகத்தின் ஆய்வில் உள்ளது. மணிமுத்தாறு நீர் மின் திட்டத்தின் சுற்றுப்புற சூழ்நிலை, இந்நீர் மின்திட்டத்தை நிறைவேற்றுவதால் களக்காடு வன விலங்கு புகலிடத்திற்கு பாதிப்புத் தன்மைகள்பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. சண்முகாநதி நீர்மின் திட்டம் மத்திய மின் ஆணைக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. மேல் அமராவதி நீர் மின் திட்டமும் மின் ஆணைக் கழகத்தின் ஆய்வில் உள்ளது. அக்காமலை நீர் மின் திட்டமும் மின் ஆணைக் கழகத்தின் ஆய்வில் உள்ளது. சின்னாறு—சிட்டாறு நீர் மின் திட்டம் மின் ஆணைக் கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டு உள்ளது. குந்தா ஐந்தாவது நிலை விரிவுத்திட்டம் மின் ஆணைக் கழகத்தின் ஒப்புதலுக்கு 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அனுப்பப்பட்டுள்ளது. பரளியாறு நீர் மின் திட்டம் தற்பொழுது எடுத்துக் கொள்ளப்படுவதாக இல்லை. கீழ்மேட்டூர் நீர் மின்சாரத்திட்டத்திற்கு மத்திய மின் ஆணைக் கழகத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மத்திய திட்டக்குழுவின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக 580 மெகாவாட் கிடைக்கும் நீர்மின் விசைத் திட்டம் பற்றி அமைச்சர் சொன்னார். அதிலே மேல்தாமிரபரணி திட்டம் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகச் சொன்னார்கள். எந்த இடத்திலே ஆரம்பிக்கப்படும்? அதனுடைய திட்ட மதிப்பீடு என்ன? சீக்கிரமே ஆய்வை முடித்து ஆரம்பிக்கப்படுமா? மணிமுத்தாறு திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் சொன்னார்கள். எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும்? எவ்வளவு மதிப்பீடு? அதனுடைய ஆய்வையும் சீக்கிரமாக முடித்து ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மேல் தாமிரபரணி நீர் மின் திட்டம், தாமிரபரணி அதன் உபநதியாகிய சேர்வலாறு மற்றும் கல்லாறு, சுரணையாறு, எனப்படும் தாமிரபரணி யாற்றின் இன்னொரு பகுதி இவைகளில் ஓடும் நீரை மின்சாரம் உற்பத்தி செய்யப் பயன்படுத்துவது ஆகும்.

இத்திட்டத்தின் மொத்த நிறுவனத்திறன் 165 மெகாவாட் ஆகும். இதற்கு ஆகும் செலவு 85 கோடியே 36 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 16]

மணிமுத்தாறு நீர்மின் திட்டத்தைப் பொறுத்தவரையில், மணிமுத்தாறு அணைக்கு மேற்பகுதியில் இரண்டு மின் நிலையங்களை அமைத்து தாமிரபரணி நதியில் கலக்கும் அதன் உபநதிகளான மணிமுத்தாறு, கீழ் மணிமுத்தாறு ஆகியவற்றில் ஓடும் நீரை மின் உற்பத்திக்குப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது இத்திட்டம். இத்திட்டத்திற்கு 29·05 கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இப்பொழுது அமைச்சரவர்கள் சொன்ன அந்த விவரங்களிலிருந்து, அவர்கள் அறிவித்த திட்டங்கள் சிபார்சு செய்யப்பட்டிருப்பது பூராவும் நீர் மின் திட்டங்கள். அனல் மின் திட்டங்கள் ஏதாவது ஆரம்பிக்கத் திட்டம் போடப்பட்டதா? அது சம்பந்தமாக ஏதாவது அனுப்பப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, மேட்டூரில் ஒரு அனல் மின் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று, அதற்காக மத்திய அரசின் ஒப்புதலுக்குத் திட்டம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல், சென்னையிலே, வடபுறத்தில் அனல் மின் நிலையத்திற்கான செயற்குறிப்பும் உள்ளது. பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தை விஸ்தரிக்கும் செயற்குறிப்பும் உள்ளது.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, மணிமுத்தாறு திட்டத்திற்கும், தாமிரபரணி திட்டத்திற்கும் மாநில அரசின் பங்கு எவ்வளவு? முழுமையாகவே மத்திய அரசு ஏற்கிறதா? அல்லது மாநில அரசும் மத்திய அரசும் பங்கு போட்டுச் செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மத்திய அரசு, மாநில அரசு மேற்கொள்ளும் திட்டங்களுக்கு ''ப்ளாக் கிராண்ட்'' என்ற அடிப்படையில் தருகிறார்கள். அந்த பிளாக் கிராண்ட் என்ற அடிப்படையில், மாநில அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுகிறது. அப்படிச் செயல்படுவதில் இப்படிப்பட்ட மின்சாரத் திட்டங்களும் அடங்குகின்றன. ஒவ்வொரு திட்டத்திற்கும் மத்திய அரசின் உதவி எவ்வளவு என்பதைச் சொல்ல இயலாது.

திரு. கு. ரமணி : துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை நம்மைப் பாதித்து வருகிறது. அது இப்பொழுது நாம் எல்லோரும் அனுபவித்து வரும் ஒரு நிலை. ஆகவே, மின்சார உற்பத்தியைப் பெருக்கப் பல்வேறு திட்டங்

களை வைத்து இருப்பதில் பாண்டியாறு—புன்னம்புழா திட்டம்— மின்சார உற்பத்தி 100 மெகாவாட் என்று நினைக்கிறேன்— அது பிளானிங் கமிஷனால் ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்தத் திட்டம் என்னவாயிற்று? அது கை விடப்பட்டதா? அல்லது அதை நடத்தித் தருவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, பாண்டியாறு— புன்னம்புழா திட்டம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட திட்டம். ஆனால் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் மின் உற்பத்தி மட்டும்தான் செய்ய இயலும். தமிழகத்தின் ஒரு பகுதிக்கு—குறிப்பாக கோவை மாவட்டத்தில் அந்த நீரை நீர்ப்பாசனத்திற்கும் பயன்படுத்த வேண்டுமென்று விவசாயிகள் கேட்டு வருகிறார்கள். ஆகவே மேற்கு நோக்கி ஓடும் நீரைக் கிழக்கே திருப்பி பாசனத்திற்குப் பயன்படுத்தலாமா என்பது பரிசீலனையில் இருந்து வருகிறது. டிசம்பர் 1978-ல் நானும் நீர்ப்பாசனத்துறை அமைச்சரும் கேரளாவிற்குச் சென்ற பொழுது அதுபற்றிப் பேசியிருக்கிறோம். நீர்ப்பாசனம் என்ற காரணத்தால்தான் அது தாமதம் ஆகிறதே தவிர மின் உற்பத்தி என்று எடுத்துக்கொண்டால் இன்றைக்குக் கூட நிறைவேற்றலாம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய நீர் மின் விசை உற்பத்தித் திட்டங்கள் பல அறிவிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, அனல் மின் திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய மின் திட்டங்கள் எப்பொழுது, யார் யார் காலத்தில் உருவாக்கப் பட்டன? எத்தனை முறை ஏற்கெனவே மத்திய அரசின் பரி சீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது? அல்லது இந்தத் திட்டங்கள் இப்பொழுதான் உருவாக்கப்பட்டுள்ளதா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எப்பொழுது, யார், யார் உருவாக்கினார்கள் என்பது முக்கிய மல்ல. திட்டங்கள் அனுமதிக்கப்பட்டவுடன் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது என்பதுதான் முக்கியம். ஏனென்றால், ஒதுக்கப் படுகிற பணத்தின் அடிப்படையில் வேலைகள் துரிதமாக நடக்கும். நமது அரசு வந்த பிறகு மின்சாரத்திற்கு ஏராளமான அளவில் பணம் ஒதுக்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்பொழுது நம்முடைய தமிழகத்தில் புதிதாக மின்விசை நிலையங்கள் துவக்குவதற்கு வேறு எங்கெங்கு வாய்ப்புகள் உள்ளன? குறிப்பாக ஒகேனக்கல் மின்சார நிலையம் ஆரம்பிக்கப்போவதாக

1979 ஏப்ரல் 16]

இருந்தது. இது சம்பந்தமாக கர்நாடக அரசோடு ஏதோ பேச்சு வார்த்தை நடந்து, அது முடியாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது எந்த நிலையில் உள்ளது? புதிதாக வேறு எங்கெங்கு ஆரம்பிப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, புதிதாக புனல் மின் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு மிகமிகக் குறைந்து வருகிறது. ஆனால், ஹொகேனக்கல் மின் உற்பத்தி திட்டம் ஒரு நல்ல திட்டம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கர்நாடக முதல்வரிடம் பேசி உள்ளார். ஆண்டுதோறும் காவிரியிலே ஓடுகிற நீர் வீணாவதைத் தடுத்து, அந்தப் பகுதியில் மின் உற்பத்தி செய்வோமேயானால் கர்நாடகத் திற்கும் நல்லது; ஏனென்றால், இப்பொழுது அவர்களும் 'பவர் கட்'டைப் போட்டிருக்கிறார்கள். தமிழகத்திற்கும் நல்லது, ஏனென்றால், நமக்கும் பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே, மீண்டும் இரு முதல்வர்களும் சந்தித்து இது சம்பந்தமாக பேசி முடிவெடுக்க இருக்கிறார்கள்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறபொழுது பாண்டியாறு—புன்னம் புழா திட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். இது நீண்ட நாட் களாக இருந்து வருகிற பிரச்சனை என்பது அமைச்சரவர்களுக்கு தெரியும். கோவை மாவட்ட விவசாயப் பெருமக்கள் அதை வரப்பிரசாதமாக எதிர்பார்க்கிறார்கள். பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் எந்தத் தேதியில் செயல்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எந்தத் தேதியில் கேரள அரசு ஒப்புக்கொள்கிறதோ அந்தத் தேதியிலிருந்து செயல்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கனம் அமைச்சர் அவர்கள் எதிர்பார்க்கப்படுகிறது, உத்தேசம் இல்லை, என்று இப்படி பதில் சொன்னார்கள். ஒரு நாடு முன்னேற வேண்டு மானால் மின் திட்டம் மிக மிக அத்தியாவசியமானது என்பது நான் சொல்லாமலே, அரசுக்குத் தெரிந்த விஷயம். ஆகவே, மத்திய அரசு இதில் சிறிய திட்டமோ, பெரிய திட்டமோ, எதுவாக இருந்தாலும் அவர்களாகவே இதை ஆரம்பிக்கக்கூடிய அளவுக்கு வற்புறுத்தப்பட்டதா? இல்லை என்று சொன்னால் இப்பொழுதும் சரி, மத்திய அரசு, சிறிய திட்டமோ, பெரிய திட்டமோ, எல்லா இடங்களிலேயும் இதை ஆரம்பிப் பதற்கு வற்புறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக வற்புறுத்தப்படும்.

திரு. தே. ஞானசிகாமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரளியாறு திட்டம் இதோடு சேர்த்துக்கொள்ளப் பட்டதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, பரளியாறு திட்டம் 35 மெகாவாட் திறனுடன் சராசரியாக ஆண்டில் 100 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடியது. இத்திட்டத்தை விட இன்னும் சிறப்பான திட்டங்களை வற்புறுத்தவேண்டி இருப்பதனால் இத்திட்டத்திற்காக மத்திய அரசாங்கத்தினை மீண்டும் வற்புறுத்தும் உத்தேசம் தற்பொழுது இல்லை.

திரு. இ. தமிழரசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் மின் விசை உற்பத்தி செய்ய தமிழக அரசிடம் எத்தனை ஆய்வுகள் இருக்கின்றன? மத்திய சர்க்கார் எத்தனை அனுமதித்திருக்கிறார்கள்? குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தில் விவசாயத்திற்கும் வீடுகளுக்கும், மின் உற்பத்தி அத்தியாவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, அனல் மின் நிலையம் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

மின் கட்டண நிலுவை

*வினா எண். 701—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் மின் கட்டண பாக்கியாக பத்து இலட்சம் ரூபாய்க்கு மேல் பாக்கி வைத்திருப்பவர்கள் யார் யார்?

(ஆ) அவர்களிடமிருந்து வசூல் செய்ய என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ)&(இ) பின்னி அண்டு கோ, மால்கோ, சக்தி பைப்ஸ், பிளாஸ்டிக் ரெசின்ஸ் அண்டு கெமிகல்ஸ், சன் பேப்பர் மில்ஸ், ஆகிய ஐந்து தொழில் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் பத்து இலட்சம் ரூபாய்க்கு